ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2463/04 - 2025 නොවැම්බර් මස 17 වැනි සඳුදා - 2025.11.17

*2463 /04 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. : 24/1951 (XVIII)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவுகள் 44, 123, 124, 125, 126, 126ஆ, 128, 132, 132அ மற்றும் 231 எனபவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**பிமல் நிரோஷன் ரத்நாயக்க,**
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும்
நகர அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2025, நவெம்பர் 15.

ஒழுங்குவிதிகள்

1. 2022ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதிய 2301/17 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மோட்டார் வாகன (சாரதி உரிம அறவீடு) ஒழுங்குவிதிகள் இதற்கான 1 ஆம் அட்டவணை பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றன :-

   (1) அதன் 12 ஆம் விடயத்தின், I ஆம் நிரல், II ஆம் நிரல் மற்றும் III ஆம் நிரல்களிலுள்ள பதிவுகளை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பதிவுகளை இடுவதன் மூலமும் :-

1A - PG 7353 - 453 (2025/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| "நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| 12. (அ) இலங்கைக்கு வெளியில் வழங்கப்பட்ட சாரதி உரிமமொன்றை அல்லது அதற்குச் சமமானவொன்றை வைத்திருக்கின்றவரான இலங்கைப் பிரசை ஒருவருக்கு சாரதி உரிமமொன்றை வழங்குதல் | 30,000.00 | 30,000.00 |
| (ஆ) இலங்கைக்கு வெளியில் வழங்கப்பட்ட சாரதி உரிமமொன்றை அல்லது அதற்குச்சமமானவொன்றை இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவருக்கு சாரதி உரிமமொன்றை வழங்குதல் | 60,000.00 | 60,000.00 |

(2) அதன் 13 ஆம் விடயத்தின், I ஆம் நிரல், II ஆம் நிரல் மற்றும் III ஆம் நிரல்களிலுள்ள பதிவுகளை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பதிவுகளை இடுவதன் மூலமும் :-

| "நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| 13. (அ) இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவருக்கு சாரதி உரிமமொன்றினை வழங்குதல் | 45,000.00 | 45,000.00 |
| (ஆ) இலங்கை பிரசையல்லாத ஆளொருவருக்கு வழங்கப்பட்ட சாரதி உரிமமொன்றினை புதுப்பித்தல் | 15,000.00 | 15,000.00 |
| (இ) தனது சாரதி உரிமம் அழிவடைந்த, திரிபடைந்த அல்லது சேதமடைந்த இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவருக்கு சாரதி உரிமமொன்றின் இணைப்பிரதியொன்றினை வழங்குதல் | 15,000.00 | 15,000.00 |
| (ஈ) தனது சாரதி உரிமத்தை இழந்த இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவருக்கு சாரதி உரிமமொன்றின் இணைப்பிரதியொன்றினை வழங்குதல் | 30,000.00 | 30,000.00 |

(3) அதன் 14 ஆம் விடயத்தின், I ஆம் நிரல், II ஆம் நிரல் மற்றும் III ஆம் நிரல்களிலுள்ள பதிவுகளை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பதிவுகளை இடுவதன் மூலமும் :-

| "நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| 14. (அ) இலங்கைப் பிரசையல்லாத வருகை தருவோருக்கு சாரதி உரிமமொன்றினை வழங்குதல்<br><br>(i) ஒரு மாத காலப்பகுதிக்காக | 15,000.00 | 15,000.00 |
| (ii) ஒரு மாதத்திற்கு மேற்பட்ட மற்றும் இரண்டு மாதங்கள் வரையான காலப்பகுதியொன்றுக்கு | 21,000.00 | 21,000.00 |
| (iii) இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட மற்றும் ஆறு மாதங்கள் வரையான காலப்பகுதியொன்றுக்கு | 30,000.00 | 30,000.00 |
| (iv) ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட மற்றும் பன்னிரெண்டு மாதங்கள் வரையான காலப்பகுதியொன்றுக்கு | 45,000.00 | 45,000.00 |
| (ஆ) இலங்கைப் பிரசையான வருகை தருவோருக்கு தற்காலிக சாரதி உரிமமொன்றினை வழங்குதல்<br><br>(i) மூன்று மாதங்கள் எனும் காலப்பகுதியொன்றுக்காக | 15,000.00 | 15,000.00 |
| (ii) மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட மற்றும் ஆறு மாதங்கள் வரையான காலப்பகுதியொன்றுக்கு | 18,000.00 | 18,000.00 |
| (iii) ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட மற்றும் பன்னிரெண்டு மாதங்கள் வரையான காலப்பகுதியொன்றுக்கு | 24,000.00 | 24,000.00 |

EOG 11-0121

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.